No. of Printed Pages : 7

**4051**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language — Part A — TAMIL — Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ]    [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

**(மதிப்பெண்கள் : 20)**

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **6x1=6**

**1.** திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் :

(அ) நால்வர் நான்மணி மாலை

(ஆ) திருவள்ளுவ மாலை

(இ) இரட்டை மணி மாலை

**2.** பாரதிதாசனார் __________ என அழைக்கப்படுகிறார்.

(அ) புரட்சிக் கவிஞர்

(ஆ) தேசியக் கவிஞர்

(இ) உவமைக் கவிஞர்

[ திருப்புக

3. நற்றிணை __________ நூல்களைச் சார்ந்தது.
(அ) பத்துப் பாட்டு
(ஆ) எட்டுத் தொகை
(இ) பதினெண்கீழ்க் கணக்கு

4. தமிழர்கள் நிலத்தை __________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
(அ) மூன்று (ஆ) ஆறு (இ) ஐந்து

5. பகைவனிடமும் அன்பு காட்டு எனக்கூறிய நூல் :
(அ) பகவத் கீதை (ஆ) நன்னூல் (இ) பைபிள்

6. வள்ளலாரின் இயற்பெயர் :
(அ) சம்பந்தர் (ஆ) இராமலிங்கர் (இ) தாயுமானவர்

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. **6x1=6**

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு __________ அமைந்துள்ளன.

8. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் __________.

9. 'நிற்க நேரமில்லை' என்ற கவிதை __________ என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ளது.

10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது __________.

11. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் __________.

12. இலெமூரியாவை __________ நாகரிகத் தொட்டில் என்பர்.

## பகுதி-3

பொருத்துக. **4x1=4**

13. இந்து - மூங்கில்
14. சந்தம் - புலி
15. உழுவை - அழகு
16. பணை - நிலவு

### பகுதி-4

விடைக்கேற்ற வினா அமைக்க. **4x1=4**

**17.** தமிழர் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர்.

**18.** பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

**19.** திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி - ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

**20.** தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

கீழ்க் காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

**21.** ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?

**22.** கணிமேதாவியார் - குறிப்பு எழுதுக.

**23.** குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?

**24.** 'இப்போது இங்கு அவன் உதவான்' - யார் யாரிடம் கூறியது ?

**25.** போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

**26.** வேந்தர்க்குரிய பொருள்கள் யாவை ?

**27.** ஆற்றுதல் என்பது யாது ?

[ திருப்புக

**பகுதி - 2**

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

**28.** தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?

**29.** மொழி மாற்றம் என்றால் என்ன ?

**30.** கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

**31.** ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக.

**32.** காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?

**33.** வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறுக.

**34.** தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை ?

**பிரிவு - III**

(மதிப்பெண்கள் : 24)

**பகுதி - 1**

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **3x4=12**

**35.** செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?

**36.** கம்பராமாயணம் - குறிப்பு வரைக.

**37.** சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

**38.** நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

**39.** 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3x4=12

40. பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

42. பேச்சுக் கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

(ii) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(iii) செறிவெனப்படுவது யாது ?

(iv) நோன்றல் - பொருள் தருக.

(v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இரு பாலர்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார் சமூக முரண்களையும் மூடக் கருத்துக்களையும் எதிர்த்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூக மாற்றத்தை விரும்பியவர். ''பெண்களே சமூகத்தின் கண்கள்'' எனக் கருதியவர். பெண்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

(i) இரு பாலருக்கும் பொதுவானது என்று பெரியார் கருதுவது யாது ?

(ii) பெரியார் எவற்றை எதிர்த்தார்?

(iii) பெரியார் பெண்களை எவ்வாறு உயர்த்திக் கூறியுள்ளார் ?

(iv) பெரியார் – பார்வையுடையவர்.

(v) மக்கள் எப்படி இருந்தால் நாடு வளமாகும் ?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **2x8=16**

47. (அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) பொருள்செயல் வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

## பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக. **2+2+3+3=10**

(அ) ''ஞாலம்'' எனத் தொடங்கும் குறள்

(ஆ) 'நிலை' - என முடியும் குறள்

(இ) 'மெய்தான் அரும்பி' - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்

(ஈ) 'மீள்நோக்கும்' - எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்

- o 0 o -